நகல்:

நகராட்சி நிர்வாக இயக்குநர், அலுவலகம், சென்னை-600 005

ந.க.எண். 99613/93/ஜே1 நாள்: 16.3.94.

## சுற்றறிக்கை

பொருள்: காலங்கடந்த வாரியினங்கள் – ராசிபுரம் நகராட்சி – காலம் கடந்த இனங்களில் ஒன்றான ஏலம் மற்றும் குத்தகை தொகை 1986.87 முதல் 1989.90 முடிய நிலுவையில் உள்ளது பிடித்தம் செய்ய கோரல்– தொடர்பாக.

பார்வை: ஆராய்வாளர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை கடிதம் 42528/தா2(6 நாள்: 14.12.93.

பார்வையில் காணும் கடிதத்தில் உள்ளாட்சி நிதித் தணிக்கை ஆராய்வாளர்கள் நகராட்சிக்கு சேர வேண்டிய ஏலம் குத்தகை தொகைகளை ஆண்டு தணிக்கையில் வசூலிக்கப்படாமல் நிலுவையில் உள்ளதால் அதனை சம்பந்தப்பட்ட பணியாளர்களிடம் இருந்து பிடித்தம் செய்ய வேண்டியுள்ளது என்றும், மேற்படி பணியாளர் பணியிலிருந்து ஓய்வுபெறும் முன்னரே நடவடிக்கை எடுக்க தவறியதால் மேற்படி நபர்களின் ஓய்வூதியம் அல்லது மற்ற ஓய்வுகால பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்ய முயலவில்லை என்றும், ஓய்வூதிய பயன் அனுமதிக்கப்பட்ட பின்னர் தொகை பிடித்தம் செய்வதற்கு உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் கருத்துருக்கள் நகராட்சி ஆணையர்களிடமிருந்து பெறப்படுவதால் அதனை பிடித்தம் செய்ய இயலாத நிலை ஏற்படுகிறதென்றும் தெரிவித்துள்ளார்.

எனவே ஓய்வுபெறும் நகராட்சி பணியாளர்கள் ஓய்வு பயன்கள் பெறும் கருத்துரு அனுப்புவதற்கு முன்னர் மேற்படி நபர்கள் பணியாற்றிய அனைத்து நகராட்சிகளிடமிருந்து அன்னார் மீது எந்த விதஒழுங்கு நடவடிக்கை நிலுவை இல்லை என்றும் பிடித்தம் செய்யப்பட வேண்டிய தொகைகள் ஏதும் நிலுவையில் இல்லை என்ற சான்று பெற்ற பின்னர் கருத்துருக்கள் அனுப்புமாறு நகராட்சி ஆணையர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

மேலும் நகராட்சி பணியாளர்கள் மாறுதலாகி வேறு நகராட்சிக்கு செல்லும்போது அன்னார் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் பிடித்தம் ஏதும் நிலுவையில் இருப்பின் மேற்படி விபரத்தினை சம்பந்தப்பட்ட ஆணையருக்கு தெரிவிக்குமாறு நகராட்சி ஆணையர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். ஓய்வுபெறும் பணியாளர்களிடம் நிலுவை தொகை அதிகமாக இருப்பின் மேற்படி தொகையின் விபரத்தை சம்பந்தப்பட்ட பணியாளருக்கு தெரிவித்து அன்னாருடைய கையொப்பம் பெற்றும் நிலுவை தொகையினை ஓய்வு பெறும் பணியாளருடைய ஓய்வூதிய பணிக்கொடை/ இறப்பு பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்ய ஆராய்வாளருக்கு தெரிவிக்குமாறும் அறிவுரை வழங்கப்படுகிறது.

மேற்படி அறிவுரைகளை தவறாமல் கடைபிடிக்குமாறு அனைத்து நகராட்சி ஆணையர்/நிர்வாக அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இச்சுற்றறிக்கையினை பெற்றுக் கொண்டமைக்கு ஏற்பளிப்பு அளிக்குமாறு அனைத்து நகராட்சி ஆணையர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/ ச. ஜெயராமன்
இயக்குநருக்காக.

/ உண்மை நகல் /

ந.க.எண். 10733/94/அ1/நாள்: 23.3.94.

நகராட்சி அலுவலகம்,
தஞ்சாவூர்.

சுற்றறிக்கையின்படி தவறாமல் கடைபிடிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

ஆணையருக்காக.

பெறுநர்:
அ1, அ2, அ3.
எச்1 முதல் எச்4 வரை
எப்1, இ1முஇ10

நகல்:
நகராட்சிப்பொறியாளர், நகராட்சி மின்பொறியாளர், நகர்நல அலுவலர், கணக்கு அலுவலர், மேலாளர், நகரமைப்பு அலுவலர். இருப்பு கோப்பு.